மின்னிதழ்

# தேசியம்

THESIYAM තේසියම්

www.thesiyamnews.com



Smart Fly
ARUN WINGS
TRAVELS & TOURS
கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com



மலர்: 02 | குரல்: 151 | வள்ளுவர் ஆண்டு 2054 | வியாழக்கிழமை 15.02.2024 | பக்கங்கள் 14


## தீபச்செல்வனின் பயங்கரவாதி நாவலுக்கு தமிழ்நாடு அரசின் பரிசு!









பக்கம்–03

## தமிழரசுக்கட்சியின் செயலாளர் விவகாரம்! சிறீதரனுக்கு சம்பந்தன் கூறிய அறிவுரை!



பக்கம்–02

## உண்ணாவிரதத்தை கைவிட்டார் முருகன்! உறுதியளித்தது இந்திய அரசு!



பக்கம்–03

## யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ள 47 குழந்தைகள்!



பக்கம்–02




பக்கம்–10

## வில்விழா தமிழர்களின் காதலர் தினம்!

## யாழில் அதிகரித்து வரும் குற்றச் செயல்கள்! அமைச்சர் டக்ளஸ் அதிரடி நடவடிக்கை!



பக்கம்–09

## புதிய கல்வி முறைமை குறித்து ஜனாதிபதி கூறியுள்ள விடயம்!



பக்கம்–09


ROLEX HOTEL
360, Galle Road, Wellawatte,Colombo06.
Tel: 011 2360462
ROLEX HOTEL
340, Hospital Road, Jaffna.
Tel: 021 2222808
E-mail: rolex.hotel@yahoo.com




# தமிழரசுக்கட்சியின் செயலாளர் விவகாரம்! சிறீதரனுக்கு சம்பந்தன் கூறிய அறிவுரை!

உட்கட்சி ஜனநாயகத்தைச் சிதைக்கும் வகையில் நடைபெறும் சூழ்ச்சிகளை முறியடித்து, உடனடியாக மாநாட்டை நடாத்துமாறு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரனுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகிய இருவரும் இணைந்து, கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் இரா.சம்பந்தனை சந்தித்துக் கலந்துரையாடிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமைப் பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் சிறீதரனுக்கு வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், நிருவாகிகள் தெரிவு தொடர்பில் இணக்க அடிப்படையில் எட்டப்பட்ட முடிவுகளை பொதுச்சபை அங்கீகரிக்காதவிடத்து, அல்லது அத்தெரிவுகளில் குழப்பங்கள் நிலவுமிடத்து,தேர்தல் முறைமை மூலம் தெரிவுகளை நடாத்தி, அன்றையதினமே மாநாட்டையும் நடாத்துமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், பொதுச் செயலாளர் பதவியை திருகோணமலையைச் சேர்ந்த குகதாசனும், மட்டக்களப்பைச் சேர்ந்த சிறிநேசனும் ஒவ்வொரு வருடமாக பகிர்ந்து கொள்வது தொடர்பில் பேசப்பட்டு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ள 47 குழந்தைகள்!

யாழ். போதனா வைத்திசாலையில் கடந்த ஆண்டு 47 குழந்தைகள் இறந்து பிறந்துள்ளன என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்திசாலையில் கடந்த ஆண்டு 5 ஆயிரத்து 510 குழந்தைகள் பிறந்துள்ளன.

அவற்றில் 47 குழந்தைகள் இறந்து பிறந்துள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அத்துடன் நிமோனியாவால் பாதிக்கப்பட்ட 1052 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் 238 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



விளம்பர

தொடர்புகளுக்கு

+94 777 163990

# உண்ணாவிரதத்தை கைவிட்டார் முருகன்! உறுதியளித்தது இந்திய அரசு!

முன்னாள் இந்திய பிரதமர்ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தண்டணை வழங்கப்பட்டு பின்னர் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட நிலையில் திருச்சி சிறப்பு முகாமில் உள்ள முருகன் அங்கு தான் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்று உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட சாந்தன் முருகன் ராபர்ட் பயஸ் ஜெயக்குமார் ஆகியோர் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் முருகன் தன்னை முகாமிலிருந்து விடுவித்து லண்டன் அனுப்ப வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்துவந்தார்.

முகாமில் உண்ணாவிரதம் இருக்கும் தனது கணவரின் உடல்நிலை மோசமாகி வருவதால், அவரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கக் கோரி தலைமைச் செயலர் திருச்சி ஆட்சியர் காவல் ஆணையருக்கு முருகனின் மனைவி நளினி கடிதம் எழுதினார். இந்நிலையில், இலங்கை தமிழர் மறு வாழ்வு முகாம் தனித் துணை ஆட்சியர் நஸிமுநிஷா முருகனிடம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினார். மேலும் லண்டன் செல்வதற்கான பாஸ்போர்ட் எடுக்க சென்னையில் உள்ள இலங்கை தூதரகத் துக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என உத்தரவாதம் அளித்ததையடுத்து முருகன் உண்ணாவிரதத்தை நேற்று முன் தினம் கைவிட்டார்.



# தீபச்செல்வனின் பயங்கரவாதி நாவலுக்கு தமிழ்நாடு அரசின் பரிசு!

ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய பயங்கரவாதி நாவலுக்கு தமிழ்நாடு அரசு சிறந்த நாவல் நூலுக்கான பரிசை அறிவித்துள்ளது.

இன்று மாலை, சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெறும், தமிழ்நாடு அரசின் 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களுக்கான பரிசினை, டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ் வெளியீட்டில், 'பயங்கரவாதி' நாவலுக்கு வழங்கப்பட உள்ளது.

யாழ் பல்கலைக்கழக மாணவத் தலைவன் ஒருவரின் காதலையும் வீரத்தையும் பேசும் பயங்கரவாதி நாவல் தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளின் நியாயங்களையும் அறங்களையும் நுணுக்கமான வகையில் பதிவு செய்துள்ளது.

ஈழத்தில் இருந்து எழுதப்பட்ட நாவல் இலக்கியம் ஒன்றுக்கு தமிழ்நாடு அரசு பரிசை அறிவித்திருப்பது இதுவே முதற்தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.







விளம்பர தொடர்புகளுக்கு
+94 777 163990

# முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரிக்கும் இளவயது மரணங்கள்!

## புதுக்குடியிருப்பில் இன்றும் பாடசாலை மாணவி ஒருவர் தவறான முடிவெடுத்து மரணம்!

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்ப்பட்ட இரணைப் பாலை கிராமத்தில் பாடசாலை மாணவி ஒருவர் தவறான முடிவினை எடுத்ததினால் உயிரிழந்த நிலையில் புதுக்குடியிருப்பு ஆதாரமருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளார்

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியில் வசிக் கும் 18 வயது பூர்த்தியாகாத உயர்தர வகுப்பு மாண வியான நிதர்சினி என்பவரே இவ்வாறு உயிரிழந் துள்ளார்

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகை யில் வீட்டில் பெற்றோர்கள் உறவினர்கள் இல்லாத நிலையில் குறித்த மாணவி தனது அறைக்குள் தூக்கில் தொங்கி தற்கொலைக்கு முயன்ற நிலை யில் காணப்பட்டுள்ளார்.

வீட்டிற்கு வந்த தாய் தந்தையர் மகளை மீட்டு புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் அங்கு அவர் உயிரி ழந்துள்ளதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

இவரது சடலம் புதுக்குடியிருப்பு மருத்துவமனை யின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்ம லிங்கம் பிரதீபன் அவர்கள் வருகைதந்து சடலத் தினை பார்வையிட்ட மாணவி தூக்கில் தொங்கிய வீட்டையும் பார்வையிட்டு தாய் தந்தையர்களிடம் விடயங்களை கேட்டறிந்து மருத்துவ பரிசோத னைகளின் பின்னர் சடலத்தினை உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த உயிரிழப்பு தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலீ





சண்முகம் தவசீலன்

சார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் மருத்துவ பரிசோதனைக ளுக்காக சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இளைஞர் ஒருவரை காதல் செய்துவந்த குறித்து யுவதி தனது காதலனுடன் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்த நிலையிலேயே இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது .

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைய காலங்க ளில் இளவயது மரணங்கள், தற்கொலைகள், தற் கொலை முயற்சிகள் தொடர்பில் சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஒரு சில தினங்களுக்கு முன்னரும் புதுக்குடியிருப்பு பகுதியில் ஒரு சிறுமி தற்கொலைக்கு முயற்சித்து உறவினர்களால் காப்பாற்றப்பட்டார்.

முன்னைய காலத்தில் கலாச்சாரம் மிக்க சமூகமாக இருந்த எமது சமூகத்தில் போதைப்பொருள் பாவ னை உள்ளிட்ட பல்வேறு சமூக சீர்கேட்டு சம்பவ ங்கள் சிறுவர்களை இளவயதினரை வெகுவாக பாதித்துள்ளது சிறுவர்களை காதல் வலையில் விழ்த்தப்பட்டு பாலியல் துஸ்பிரயோகம் செய்யப் படுவதும் பாலியல் இச்சைகளுக்கு பயன்படுத்திவிட்டு அவர்களை ஏமாற்றுவதும் என பல்வேறு சம்ப வங்கள் இடம்பெறுகின்றன.

எந்த ஒரு பிரச்சனைக்கும் தற்கொலை தீர்வல்ல பெற்றோர்கள் , சிறுவர்கள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக சிறுமிகள் பாடசாலை சென்று வருகின்ற போதும் மேலதிக, பிரத்தியேக வகுப்புகள் சென்று வரும்போதும் விசேடமாக தொலைபேசி பாவனை என்பது தற்போது பல்வேறு பிரச்சனைகளுக்கு வழி வகுக்கிறது குறிப்பாக பிள்ளைகள் தொலைபேசி பாவிக்கும் போதும் பெற்றோர் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

குறிப்பாக எமது இளவயதினர் இவ்வாறு வீணாக உயிரை மாய்க்கின்ற சம்பவங்களை குறைக்க பெற் றோர் சமூக ஆர்வலர்கள் மிகவும் அக்கறையுடன் செயற்ப்படவேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோ ரிக்கை விடுத்துள்ளனர்.

# புதுக்குடியிருப்பில் புதையல் தோண்டிய சந்தேகத்தில் ஆறு பேர் கைது!

யுத்த காலத்தில் புதைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் தங்கம் மற்றும் சொத்துக்கள் இருப்பதாக 5ம் வட்டாரம் இரணபாலை புதுக்குடியிருப்பில் உள்ள தென்னந் தோட்டத்தில் இரகசியமாக தோண்டிய எடுக்க முற்பட்ட 06 பேர் கடந்த தினம் புதுக்குடியிருப்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்

12.02.2024 அன்று புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம் பி ஆர் ஹேரத்துக்குக் கிடைத்த இரகசிய தகவலின்படி, இரணைப்பாலை பிரதேசத்தில் யுத்தத்தின் போது புதைக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் தங்கம் மற்றும் சொத்துக்களை தேடும் நோக்கில் அகழ்வுப் பணியில் ஈடுபட்டிருந்த 06 நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம் பி ஆர் ஹேரத்துக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொறுப்பதிகாரி எம் பி ஆர் ஹேரத், பிரதீபன், ஜெனன், அபேரத்ன, ஜெயசூரிய, அருஸ் , மதுரங்க, விஜயரத்ன ஆகிய பொலிஸ் குழுவினரால் அகழ்வுப் பணியில் ஈடுபட்டிருந்த குறித்த 06 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

குறித்த இடத்தில் ஏற்கனவே தண்ணீர் எடுப்பதற்காக கட்டப்பட்ட கிணற்றின் அருகில் 03 அடி நீளமும் 06 அடி ஆழமும் கொண்ட குழி தோண்டிக்கொண்டிருந்த சந்தேக நபர்களும் அவர்களது சொத்துக்களும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெற்றது

நெடுங்கேணி பகுதியை சேர்ந்த இருவர் ,மாத்தறை பகுதியை சேர்ந்த இருவர் மதவாச்சி,பதவிய, போன்ற பகுதிகளை சேர்தவர்களே. இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்கள் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் சான்று பொருட்களையும் 13.02. 2024 முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் பதில் நீதிபதி ரி பரஞ்சோதி முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட போது குறித்த ஆறு சந்தேக நபர்களும் எதிர்வரும் .27.02.2024 வரை விளக்கமறியலில் .வைக்கப்பட்டுள்ளனர்

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றார்கள்.



சண்முகம் தவசீலன்



# முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அபிவிருத்தி குழு கூட்டம்!

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று (14.02.2024) பிற்பகல் 12 மணிக்கு கரைதுறைப் பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அபிவிருத்தி குழு தலைவர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம.உமாமகள் பாராளுமன்ற உறுப்பினர்களது பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள், பிரதேச சபையின் செயலாளர், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள், அரச அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில் நெல்லுக்கான கட்டுப்பாட்டு விலை, யானை வேலி அமைத்தல், வீதி வேலைகள் , வீடு, காணி பிரச்சினைகள் அத்தோடு தனியார் பேருந்து வழியனுமதி பத்திரங்களை புதுப்பித்தல், கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்தல் போன்ற பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்ததுடன்
விரிவாக மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளதாக அபிவிருத்தி குழு தலைவரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.








# மாங்குளத்தில் அரச பேருந்தும் இராணுவத்தினரின் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்து!

அரச பேருந்தும் இராணுவத்தினரின் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்து நான்கு இராணுவத் தினர் உட்பட 6 பேர் காயம்

இலங்கை போக்குவரத்து சபை பேருந்தும் இராணுவத்தினரின் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு இராணுவத் தினர் உட்பட 6 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் A9 வீதியில் இடம்பெற்றுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொக்காவில் பகுதியிலேயே குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துணுக்காயிலிருந்து காரைநகர் நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்து எதிரே பயணித்த இராணுவ ரக் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதியுள்ளது.

விபத்துக்குள்ளான இராணுவ வாகனம் குடை சாய்ந்ததில் 4 இராணுவத்தினர் காயமடைந் துள்ளதுடன், பேருந்தில் பயணித்த பெண் ஒருவரும் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பேருந்தை செலுத்திய சாரதியும் காயங் களுடன் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் சரண டைந்த நிலையில் குறித்த சாரதி பொலிசாரால் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

குறித்த விபத்து தொடர்பில் மாங்குளம் பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.







# அத்தியாவசிய பொருட்களின் விலைகளில் ஏற்படவுள்ள மாற்றம்!

சிங்கள, தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு முன்னர் அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சில் நேற்று (14) நடைபெற்ற கலந்துரையாடலில் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், இறக்குமதி செய்யப்படும் பல பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரிகளை குறைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, எதிர்வரும் காலங்களில் விலை அதிகரிப்பு இருக்காது எனவும், விலை குறைப்பு மட்டுமே மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார். மேலும், தேங்காய் எண்ணெய் இறக்குமதியை மட்டுப்படுத்துவது மற்றும் உள்ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்திகளின் தரத்தை மேம் படுத்துவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.




# ஜனாதிபதி நிதியத்தின் புதிய இணையத்தளம் அறிமுகம்!

ஜனாதிபதி நிதியத்தின் புதிய இணையத்தளம் நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் மூலம், ஜனாதிபதி நிதியத்தால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான புதிய தகவல்களை மும் மொழிகளிலும் பொதுமக்கள் பெற முடிவதுடன், மருத்துவ உதவி பெறுவது தொடர்பான விண் ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்யும் வசதியும் உள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளரும் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளருமான சரத் குமார, ஜனாதிபதி நிதியத்தின் பிரதிப் பணிப்பாளர் கயான் மொரலியகே மற்றும் ஜனா திபதி நிதியத்தின் உதவிப் பணிப்பாளர் டபிள்யூ. டி.எம். பொதேஜ ஆகியோர் கலந்துகொண்டனர்.



விளம்பர தொடர்புகளுக்கு +94 777 163990

# புதிய கல்வி முறைமை குறித்து ஜனாதிபதி கூறியுள்ள விடயம்!



நாட்டை பொருளாதார மாற்றத்திற்கு இட்டுச் செல்வதற்கு, உலகத்திற்கு உகந்த வகையிலான புதிய கல்வி முறைமை அவசியமானது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரியில் நேற்று (14.02.2024) இடம்பெற்ற நிகழ்வில் வைத்து உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2022இல் நாட்டில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியால், கல்வித் துறை மட்டுமல்ல, அனைத்துத் துறைகளும் சரிவைச் சந்தித்தன. பாடசாலை பாடப்புத்தகங்கள், சீருடைகள் வழங்க முடியவில்லை.

அந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க எந்த தலைவரும் முன்வரவில்லை. அப் போது, சவாலை ஏற்று, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் திட்டத்தை ஆரம்பித்தேன். இந்த பொருளாதார வேலைத்திட்டத்தினால் இன்று நாடு ஓரளவு பொருளாதார ஸ்திரத்தன்மை பெற்று வருகின்றது. கல்வி மறுசீரமைப்பின் ஊடாக நாட்டில் புதிய கல்வி முறையொன்றை உருவாக்க வேண்டும். உலகிற்கு பொருத்தமான தொழில் படையினை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டில் பொருளாதார புரட்சியை ஏற்படுத்துவதற்கு கல்வி முறையை உலகிற்கு பொருத்தமான வகையில் மாற்றியமைக்க வேண்டும்.

அதன் மூலம் உலகிற்கு தேவையான தொழில் படையினை உருவாக்க முடியும். அதனூடாக சர்வதேச சந்தையுடன் போட்டியிடும் வாய்ப்பு எமக்கு கிடைக்கும். பரீட்சைகளின் சுமைகளை குறைத்து ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்ப பாடங்களை கல்வி முறையில் உள்வாங்கி தொழில் முறைகளுக்கு உகந்த சமூகத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம் என குறிப்பிட்டுள்ளார்.

# யாழில் அதிகரித்து வரும் குற்றச் செயல்கள்!

## அமைச்சர் டக்ளஸ் அதிரடி நடவடிக்கை!

யாழில் அதிகரித்து வரும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த கிராமங்கள் தோறும் விழிப்பு குழுக்களை அமைப்பது அவசியம் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், வாள்வெட்டு சம்பவங்கள், கால் நடை திருட்டு, சட்டவிரோத மணல் அகழ்வு,போதைப் பொருள் பாவனை ஆகியவை அதிகரித்துக் செல்கின்றன என்றும், அதனால் பொது மக்கள் மத்தியில் அச்சமான நிலை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என ஊடக வியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இது நீண்டகாலப் பிரச்சினை, இதற்கு நடவடிக்கை எடுக்க விரும்புகின்றேன். அதாவது கால் நடை திருட்டு, சட்டவிரோத மணல் அகழ்வு, போதைப் பொருள் சம்மந்தமாக இந்த கூட்டத்தில் கலந்துரையாட இருந்தேன்.




ஆனால் நேரம் போதவில்லை. இக் கூட்டம் முடிந்த பின்னர் நான் கிராமங்கள் தோறும் சென்று கிராம மட்டங்களில் விழிப்பு குழுக்களை அமைத்து இவ்வாறான குற்றச்செயலை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரலாம் என நம்புகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

# சஜித்துடன் இணைந்தார் முன்னாள் சிறப்பு அதிரடிப்படை தலைவர்!

முன்னாள் சிறப்பு அதிரடிப்படை தலைவரான நிமல் லெவ்கே ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணைந்துள்ளார். கட்சிக்கான உறுப்புரிமையை ஐக்கிய மக்கள் சக்தி யின் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் நேற்று (14.02.2024) பெற்றுக்கொண்டுள்ளார்.

கடந்த சில காலங்களாக சஜித்துக்கு ஆதரவு வழங்கி இருந்த நிலையிலேயே தற்போது கட்சியில் உறுப்பினராக இணைந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ள மூன்றாவது பாதுகாப்புத் துறை உயர் அதிகாரி இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் சிவன் பற்றிக் குறிப்பிடும் பிராமிக் கல்வெட்டு கண்டுபிடிப்பு.

இலங்கையில் சிவன் பற்றிக் குறிப்பிடும் பிராமிக் கல்வெட்டு கண்டுபிடிப்பு.சிவன் பெயரில் இலங்கையில் காணப்படும் 3வது ஊர் பற்றிய குறிப்பும் இக்கல்வெட்டில் உள்ளது.

இக்கல்வெட்டு கடந்த ஆண்டு, 2023 யூன் மாதம் 10 ஆம் திகதி பொலநறுவை மாவட்டத்தில் உள்ள திம்புலாகல மலையில் கண்டுபிடிக்கப்பட்டது. எனினும் இதுபற்றிய விபரங்கள் இப்போதுதான் வெளிவருகின்றன. பொ.ஆ.மு 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டு மொத்தமாக 10 வரிகளைக் கொண்ட மிகப்பெரிய பிராமிக் கல்வெட்டாகும். இதில் மொத்தமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டின் அகலம் 48 அடிகளாகும். உயரம் 10 அடிகளாகும்.

இக்கல்வெட்டின் முதல் வரியில் பல எழுத்துக்கள் சிதைந்து காணப்படுவதால் எந்த விபரங்களும் வாசித்து தெரிந்து கொள்ள முடியவில்லை.

இரண்டாவது வரியில் தீபராஜா எனும் மன்னன் பெயரும், சிவன் எனும் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது வரியில் பகுபசிக என்பவனின் மனைவி மற்றும் மாணிக்க வியாபாரி ஆகியோர் பற்றியும், நான்காவது வரியில் இளவரசர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ள திஸ்ஸ, சூரதிஸ்ஸ, ஆகியோரின் பெயர்களும்,ஐந்தாவது வரியில் கோத்த, சகசதேவ, பகுபசிக ஆகிய பெயர்களும், மேலும் "சிவபிகம" எனும் ஊரின் நிர்வாகி பற்றியும் பொறிக்கப்பட்டுள்ளது.ஆறாவது வரியில் தேரர் ஒருவர் பற்றியும், ஏழாவது வரியில் விசாக எனும் இளவரசன் பெயரும், அரிய எனும் பிராமணர் கிராமம் ஒன்றில் இருந்த வணிக மையம் பற்றியும்,எட்டாவது வரியில் உபராஜன் ஒருவன் மலைப் பகுதிக்கு நீர் வழங்கியமை பற்றியும், சங்கத்தார்க்கு வழங்கப்பட்ட குகை தானம் பற்றியும், ஒன்பதாவது வரியில் பிக்கு கள் பற்றியும், பத்தாவது வரியில் பரஜய எனும் தியான இடம் பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலும் "முஜி பரத" எனும் பெயரும் இக்கல்வெட்டில் காணப்படுகிறது.

இக்கல்வெட்டு பலவகையிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டாகும்.இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப் பட்ட முற்கால பிராமிக் கல்வெட்டுக்களில் இதுவே அளவில் பெரியதாகும்.

இதுவரை இலங்கையில் கிடைக்கப்பெற்ற பிராமிக் கல்வெட்டுகளில் சிவனின் பெயருடன் தொடர்புடைய இரண்டு ஊர்கள் பற்றிய கல்வெட்டுக்களே கிடைத்துள்ளன.அவற்றில் முதலாவது தென் மாகாணத்தில் இருந்த சிவநகரம் பற்றியும், இரண்டாவது சப்ரகமுவ மாகா ணத்தில் இருந்த சிவநகரம் பற்றியும் குறிப்பிடு கிறது.

மூன்றாவது கல்வெட்டு தற்போது வடமத்திய மாகாணத்தில் கிடைக்கப்பெற்ற இந்தக் கல்வெட்டாகும். இதில் "சிவபிகம" எனும் ஊர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட விபரங்களை பேராசிரியர் கருணாரத்ன ஹெட்டியாரச்சி மற்றும் கல்வெட்டு ஆய்வாளர் மாலனி டயஸ் ஆகியோர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஆய்வாளர் திருச்செல்வம்







# வில்விழா தமிழர்களின் காதலர் தினம்!

பண்டைய தமிழகத்தில், காதல் திருவிழா உண்மைக் காதலையும் காதலரையும் போற்றிக் கொண்டாடிய திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. அத்திருவிழா தமிழர் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டது. காதலும் வீரமும் தமிழர் பண்பாடு என்பதனால், தமிழர்தம் மறத்தையும் காதல் அறத்தையும் இணைத்து உலகுக்கு உணர்த்தும் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

காதல் விழா, காமவேள் கையில் உள்ள கரும்பு வில்லைக் குறிக்கும் விதத்தில், அவ்வில்விழா என்றும் அழைக்கப்பட்டுள்ளது.
சிறந்த புகழுக்குரிய சோழ மன்னர்களில் கரிகால் சோழனும் ஒருவன். அவனின் ஆட்சிக்கு உட்பட்ட பூம்புகார் பெருநகரில் வில்விழா நடந்தது என்று ஆதிமந்தி கூறும் கூற்றுக்குச் சான்றுகள் எதுவும் தேவையில்லை.

**விழா ஏற்பாடுகள்**
காதல் விழாவின்போது நடைபெற்ற ஏற்பாடுகளை மணிமேகலை பட்டியலிட்டு காட்டுகிறது. அது, விழா நடத்தும் மன்னனுக்கும் மக்களுக்கும் அவ்விழாவில் இருந்த ஈடுபாட்டை உரைப்பதாக அமைந்துள்ளது.

**காதலர்கள் தங்குமிடம்**
விழாவிற்குச் செல்லும் காதலர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட இடத்திற்குப் பொதுப்பெயராக, "மூதூர்ப் பொழில்" என்று பெயரிடப் பட்டிருந்தது. அவ்விடத்திற்கு, "இளவந்திகை" என்னும், சிறப்புப் பெயரும் இடப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**இளவேனில்**
இலக்கியத்தில் காதல் தலைவியர், தங்கள் காதல் தலைவனைக் காதலித்து விரும்பியது போலவே இளவேனிலும் அவர்களைக் காதலால் விரும்புகின்றது என்ற கற்பனை இடம்பெற்றுள்ளது. எவ்வாறென்றால், காதலரைக் கூடிக் களித்து மகிழும் மகளிர், தங்கள் காதல் தலைவனை அணைத்த கை நெகிழ்ந்து விடாமல் பின்னிக் கிடக்கச் செய்வதே இளவேனில் தான் என்பர். தம்மை விரும்பும் நல்லவராகிய காதல் தலைவர்க்கு தாம் நல்லவர் ஆனது போல, காதல் திருவிழாவின் வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் காதலர்க்கும் இளவேனில் நல்லையே என்று கலித்தொகை பாராட்டுகிறது.

**விழா பரம்பல்**
இந்திர விழாவைக் காமதேவன் விழா என்றும், வில் விழா என்றும், வேனில் விழா என்றும் கொண்டாடப்பட்ட காதல் திருவிழா, பூம்புகார்ப் பட்டினத்தில் மட்டும் கொண்டாடப் படவில்லை. தமிழ்க் கூடல் நகரமாகிய மதுரை மாநகரிலும் கொண்டாடப்பட்டது மதுரைப் பட்டணத்தில் நிகழ்ந்த வில்விழாவைச் சிலப்பதிகாரம் குறிப்பிடப்படுகிறது.
காதல் திருவிழாவின்போது, பங்குனித் திங்களைப் பனி அரசாளும் என்று கூறப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. புகார் நகரத்தில் திருவிழா நடைபெற்ற அதே




நாளில் கூடல் மாநகரமும் விழாக் கோலம் கொண்டிருந்தது என்று அறியப்படுவதனால், காதலர்த் திருவிழா தமிழகம் முழுமைக்கும் பொதுவானது என்றே குறிப்பிட வேண்டும்.

பழங்கதைகளின்படி தன் நகரத்தில் காதல் தெய்வத் திருவிழா கொண்டாட அருள் செய்ய வேண்டும் என்று இந்திரனை வேண்டினான் சோழன். அவனின் வேண்டுகோளை ஏற்ற இந்திரன், அதற்கு உடன்பட்டான். அந்நாள் தொடங்கி காவிரிப்பூம் பட்டினத்தில் காதல் திருவிழா நடைபெற்று வந்துள்ளது. காதல் தேவனை வணங்கும் பெண்கள் வினையின் காரணமாகவும் போரின் காரணமாகவும் பிரிந்திருக்கும் காதலரை மீண்டும் கூடி இன்பமடைய வேண்டும் என விரும்பும் பெண்கள், தங்கள் காதல்தேவனை வணங்கி, "காமன் திருநாளில், அவரும் அவருக்குத் துணையான நானும் சேர்ந்திருந்து மகிழ்ந்துகளிக்க அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டுகின்றனர்.

**கடற்கோள்**
இத்துணைச் சிறப்புகளுடன் கொண்டாடப்பட்ட காதல் தேவனின் திருவிழா நின்றுவிட்டதை அறிந்து கோபம் கொண்ட இந்திரன், சாபம் இடுகின்றான். அதனால், பூம்புகார் துறைமுகப் பட்டினத்தைக் கடல் கொண்டது என்று நாட்டார் பழங்கதைகள் கூறுகின்றன.

கரிகால் வளவனின் மகன் சோழன் நெடுமுடிக் கிள்ளி கடைச் சங்க காலத்தில் சோழ அரசில் வீற்றிருந்த சோழன்நெடுமுடிக் கிள்ளி, தன் குழந்தையைத் தவறவிட்டுவிடுகிறான்! தன் குழந்தையைக் காணாமல் குழந்தையைத்தேடிக் கண்டு பிடிப்பதில் அதிக

தொடர்ச்சி 11 பக்கம்

# வில்விழா தமிழர்களின் காதலர் தினம்!

நாட்களாக ஈடுபட்டுக் கொண்டிருந்தான். அதனாலும், குழந்தையைக் காணவில்லையே என்ற ஏக்கத்தினாலும் ஆண்டுதோறும் நடத்த வேண்டிய காமதேவன் விழா நடைபெறவேண்டியதையும் மறந்தான்.

தன்னைக் குறித்து எடுக்கப்பெற்ற விழாவானது தடைப்பட்டதால் கோபமுற்ற இந்திரன் சாபமிட்டதால், புகார் நகரைக் கடல் கொண்டது என்று, மேகலாதெய்வம் கூறியதாகவும் அதை, அறவணடிகள் மணிமேகலைக்குக் கூறியதாகச் சீத்தலைச் சாத்தனார் கூறுகிறார்.

நெடுமுடிக் கிள்ளிக்குப் பின் காதலர் திருவிழா நின்றுவிட்டதாகத் தெரிகிறது. என்றாலும், தமிழகத்தின் தென்பகுதிகளில், குறிப்பாக, சோழமண்டலத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் காமனுக்குக் கோயில் இருப்பதைக் காணலாம். ஆண்டுதோறும் மாசித் திங்களின் போதில், காமன் விழா சீறோடும் சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டு தானிருக்கிறது. பூம்புகார் பெருநகரப் பட்டினம் கடலால் சூழப்பட்டு கடலுக்கு இரையானாலும் காமதேவனுக்காக எடுக்கப்படும் விழா நின்றுவிடவில்லை.

**நேற்றைய காதலர் நாள்**

பழந்தமிழின் தொன்மையை ஆராய்ந்து கொண்டிருக்கும் அறிஞர் பெருமக்களில் ஒருவரான பேராசிரியர் கே. உலகநாதன், தமிழ் மொழியின் தொன்மை வடிவமாகிய சுமேரு இலக்கியத்திலும் இந்திர விழா பற்றிய குறிப்புகள் காணப் படுவதாகக் கூறியுள்ளார். அவரின் குறிப்புகளைக் கொண்டு பார்க்கும்போது, தமிழகம்,"வில்விழா - உலகில் நடக்கும் காதல் திருவிழா அனைத்திற்கும் மூலமாகவும் முன்னோடியாகவும் விளங்கிற்று" என்று கூறலாம்.

காதல் தமிழர்களின் அனைத்து காவியங்களிலும் பெரும் அங்கம் வகிக்கிறது. காதல் இங்குச் சாதியும் மதமும் உருவாகும் முன்பே தோன்றியது.

# சிங்கள அமைச்சர் சாணக்கியனை வழிநடத்தினார்! சிவில் சமூக செயற்பாட்டாளர்!

கறுப்பு சுதந்திரதின போராட்டத்தின் போது சிங்கள அமைச்சர் சாணக்கியனை வழிநடத்தியதாக சிவில் சமூக செயற்பாட்டாளர் வி.லவக்குமார் தெரிவித்துள்ளார்.
எமது செய்தி பிரிவிற்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலின் போதே அவர் இதனை கூறினார்.
மேலும் கூறுகையில்,
நாட்டின் சுதந்திர தினத்தை, கறுப்பு சுதந்திர தினமாக அனுஷ்டிக்க தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளாலும் பல்கலைக்கழக மாணவர்களாலும் போராட்டம் ஒன்று ஆயத்தமாக்கப்பட்டது.
குறித்த போராட்டத்தில் கலந்துகொள்வதற்கான அழைப்பு அனைத்து தமிழர் தரப்பினரிற்கும் விடுக்கப்பட்டது.
வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவி அமலி அம்மா துரதிஷ்டவசமாக அந்த போராட்டத்திற்கு தலைமை தாங்க முடியாத நிலை ஏற்பட்டது.
இதன் காரணமாக வேலன் சுவாமிகள் கறுப்பு




சுதந்திரதின போராட்டத்திற்கு தலைமை தாங்கினார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சில பிரதேசவாதங்களை பேசியதை காண கூடியதாக இருந்தது என கூறியுள்ளார்.




# தமிழரசின் பொதுச்செயலாளர் பதவியில் மீண்டும் இழுபறி!

## திருமலையில் கூடவுள்ள பொதுக்குழு!

இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ளது என்று அந்தக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித் தார்.

எனினும், மாநாடு நடைபெறும் வரைக்கும் பொதுச்செயலாளர் பதவி இழுபறி நிலை தொடரும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு வாக்கெடுப் பின் ஊடாக நடைபெற்று முடிந்திருந்தது. அதற்கு அமைவாக சிறீதரன் தெரிவாகியிருந்தார்.

இதன் பின்னர் கட்சியின் ஏனைய நிர்வாகப் பதவிகளுக்கான தெரிவு தொடர்பான மத்திய குழு மற்றும் பொதுக் குழுக் கூட்டம் என்பன கடந்த மாதம் திருகோணமலையில் நடைபெற்றன. பொதுச்செயலாளர் உட்பட நிர்வாகக் குழுவுக்கான பெயர்கள் மத்திய குழுவில் தெரிவு செய்யப்பட்டு அது பொதுக் குழுவுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

பொதுக் குழுவில் இதன்போது குழப்பம் ஏற்பட்டது. இதன் காரணமாக கட்சியின் தேசிய மாநாடும் ஒத்திவைக்கப்பட்டது.

குறிப்பாக பொதுச்செயலாளர் பதவி தொடர்பில் குழப்பம் நீடித்தது. பொதுச்செயளாளராகத் திரு கோணமலை மாவட்டக் கிளையின் தலைவர் சண் முகம் குகதாசனின் பெயர் பிரேரிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநே சனுடைய பெயரும் அந்தப் பதவிக்குப் பிரேரிக் கப்பட்டிருந்தது. இதனால் குழப்பம் நீடித்தது.
இது தொடர்பில் ஆராயும் கூட்டம் வவுனியாவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கட்சித் தலைவர் சி.சிறீதரனும் பங்கேற்றிருந்தார்.
இழுபறி நிலையிலிருந்த பொதுச்செயலாளர் பதவி யை குகதாசன் மற்றும் ஸ்ரீநேசன் இருவருக்கும் சுழற்சி முறையில் வழங்க முடிவு செய்யப்பட்டி ருந்தது.
அதில் முதலாவது வருடம் யார் பொதுச்செயலாளர் பதவியை வகிப்பது என்பதிலேயே இழுபறி நிலை நீடித்த நிலையில் அதற்கு தற்போது இணக்கம் காணப்பட்டது. முதலாவது வருடம் குகதாசனுக்கும், அடுத்த வருடம் ஸ்ரீநேசனுக்கும் வழங்க தற்போது இணக்கம் காணப்பட்டது.

இதற்கு அமைவாக எதிர்வரும் 19ஆம் திகதி கட்சியின் தேசிய மாநாடு திருகோணமலையில் நடை பெறவுள்ளது என்று கட்சியின் தலைவர் சிறீதரன் தெரிவித்தார்.





# உடனடி வேலைவாய்ப்பு

வடக்கு மாகாணம் முழுவதும்
தேசியம் வாராந்த பத்திரிகையை
விநியோகம் செய்வதற்கு ஆண்/ பெண்
இருபாலரும் தேவை

தொடர்புகளுக்கு:
077 716 3990-076 567 3339

# காணி விற்பனைக்கு

## புத்தூர் மட்டுவில்

### பிரதான வீதியில்.

**2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.**

**2 பரப்பு - 5,50,000/=**

**20 அடி பாதையுடன்.**

- யாழ் மத்திய பொருளாதார சந்தைக்கு அருகாமையில் காணி அமைந்துள்ளது.
- ஆலையங்கள் மற்றும் வைத்தியசாலை, பாடசாலைகளும் அருகாமையில் உள்ளது.

- நன்னீர் நிலம்,
- மேட்டு நிலம்,
- மின்சார வசதியும் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு :

**076 10 98 504, 074 26 00 617**

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road,
Jaffna.Tel : 021 222 7557

SCAN ME

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |

# SMART TECH SOLUTION





உங்கள் வீடு, அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு CCTV கண்காணிப்பு கமரா சிறந்த முறையில் அமைத்துத்தரப்படும். சிறந்த வாடிக்கையாளர் சேவை அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் CCTV installation துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்த நிறுவனம்.

## Our Services:

CCTV sales & Installation / Alarm system
Door Lock /Finger Print Attendance /Electric Fence / Local Networking / Computer Repair & Maintenance / Software Development



CCTV பொருத்துனர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

Contact us for More Information
+94 77 684 3023

+94 71684 3023 / +94 21221 3023
No: 282, Hospital Road, Jaffna.
www.smarttechsolution.lk

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road,
Jaffna.Tel : 021 222 7557

SCAN ME